ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# விவாதப் போக்குகளுக்குள் இலக்கண விளக்கம்

முனைவர் கு. வடிவேல்முருகன்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை சுழற்சி -II
துவாரகதாஸ் கோவர்தன் தாஸ்
வைணவக் கல்லூரி (தன்னாட்சி)
அரும்பாக்கம், சென்னை - 600 106.

**முன்னுரை**

தமிழக வரலாற்றில் சமயச் சண்டைகளும் அது சார்ந்த இலக்கண இலக்கிய நூல்களின் மீதான காழ்ப்புகளும் ஏராளம். சம்பந்தர் அனல்வாதம், புனல்வாதம் செய்து எண்ணாயிரம் என்ற ஊரில் சமணர்களைக் கழுவில் ஏற்றிய செய்தியைப் பெரிய புராணத்தின் வாயிலாக அறிய முடிகிறது. மேலும், தருமசேனர் நாவுக்கரசர் ஆனதும், கூன் பாண்டியன் நின்ற சீர் நெடுமாறன் ஆனதும் வரலாறாகும். மன்னர்களும் சமயக் காழ்ப்பால் சுவடிகளைத் தீக்கிரையாக்கிய நிகழ்வுகள் வரலாற்றில் காணப்படுகின்றன. இவ்வாறாக வைதீக x அவைதீக சமயப் பூசல்கள் ஒருபுறமும், பின்னாளில் வந்த கிறித்துவ, இஸ்லாமிய சமயங்களுக்கும் இடையே நடந்த வாத விவாதங்கள் ஒரு புறமும், திராவிட - ஆரிய மொழிப்போராட்டங்கள் ஒரு புறமும் எனத் தமிழில் மறுப்புரை இலக்கியங்களின் வரலாற்றினை விரிவுபடுத்தியிருப்பதனை அறிய முடிகிறது. அவ்வகையில் கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைத்தியநாத தேசிகர் இயற்றிய 'இலக்கண விளக்கம்" என்னும் நூலுக்கு மறுப்பாக கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் சிவஞான முனிவரால் 'இலக்கண விளக்கச் சூறாவளி' என்னும் நூல் எழுதப்பட்டது. கி. பி. 1889-இல் இலக்கண விளக்கத்தைப் பதிப்பித்த சி. வை. தாமோதரம் பிள்ளை அதன் பதிப்புரையில் இலக்கண விளக்கச் சூறாவளியை மறுத்தும் சிவஞான முனிவரின் எதிர்ப்பைப் பற்றியும் மிக விரிவாக எழுதுகிறார். பதிப்புரையில் சி. வை. தாமோதரம் பிள்ளையால் முன் வைக்கப்பட்ட செய்திகளை அறிந்த சபாபதி நாவலர் 1894-இல்

'இலக்கண விளக்கம் பதிப்புரை மறுப்பு' என்னும் நூலை எழுதி வெளியிட்டார். அதில் சி. வை. தாமோதரம் பிள்ளையையும் இலக்கண விளக்க நூலையும் கடுமையாக விமர்சிக்கிறார். இப்பிரச்சினை கி. பி. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் செந்தமிழ்ச்செல்வி இதழில் மிகப் பெரியளவில் விவாதிக்கப்பட்டது. சி. வை. தாமோதரம் பிள்ளைக்கும், சிவஞான முனிவருக்கும் ஆதரவாகக் கருத்துகள் முன்வைக்கப்பட்ட நிலை அன்று பரவலான ஒன்றாக ஆய்வுலகில் இடம் பெற்றுள்ளது.

அவ்வகையில் இலக்கண விளக்க நூல் இயற்றிய வைத்தியநாத தேசிகரின் இரண்டாவது மகனாராகிய தியாகராச தேசிகர், இலக்கண விளக்கப் பொருளதிகாரத்தின்பிற்சேர்க்கையாகப் பாட்டியல் என்ற பகுதியைஇயற்றி நூலோடு சேர்த்தார். பாட்டியலுக்குத் தாமே உரையும் எழுதியிருக்கிறார். இப்பாட்டியல் இலக்கண விளக்கத்துடன் சேர்ந்தே உள்ளன. வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பட்டதும் பாட்டியல் தவிர்த்த ஏனைய பகுதிகளை உள்ளடக்கியதுமாகிய இலக்கண விளக்கத்திற்கு உரை எழுதியவர் யார் என்பதில் மிகுந்த கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதற்கு அடிப்படைக்காரணியாக அக்காலத்தில் உருப்பெற்று வளர்ந்த இதழ்களின் பங்கு மிக முக்கியமானதாகும். ஏனெனில் சமகாலப் பிரச்சனைகளோடு அறிஞர்களும், கல்வியாளர்களும் இவ்விதழ்களில் ஊடாடி வந்தனர். அத்தகைய இதழ்களில், செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், சித்தாந்தம் போன்ற இதழ்கள் குறிப்பிடத்தக்கன. இத்தகைய இதழ்களில் இலக்கிய, இலக்கணம் சார்ந்தும், காலம், சமயம், வரலாறு சார்ந்தும் உரையாடல்கள் பெருமளவில் நிகழ்த்தப்பட்டன.

இந்தப் பின்புலத்தில் இலக்கண விளக்கம் X சூறாவளி சார்ந்த மறுப்புகள் ∴ கண்டனங்கள் வெளிவர செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி ஆகிய இதழ்களே களனமைத்துக் கொடுத்தன. செந்தமிழ்ச்செல்வியில் 1924-ஆம் ஆண்டு மார்ச்சு (சிலம்பு - 2, பரல்-3) இதழில் தொடங்கி 1925 ஜனவரி (சிலம்பு-2, பரல்-12) வரை இருத்தரப்பினரும் தத்தமது கண்டனங்களை வெளியிட்டு வந்தனர்.

அவ்வகையில் செந்தமிழ்ச் செல்வியில் இலக்கண விளக்கத்தின் மேல் வந்த வாதங்களையும் மறுப்புகளையும் ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**இலக்கண விளக்க உரையாசிரியர் தொடர்பான விவாதங்கள்**

செந்தமிழ்ச்செல்வியில் இலக்கண விளக்கத்திற்கு உரை எழுதியவர் யார் என்பதில் மிகுந்த கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதை விளக்கும் வகையில், இலக்கண விளக்கப் பதிப்புரையாளர் சி. வை. தாமோதரம் பிள்ளையின் கருத்துக்களை முன்னிறுத்தி ந. மு. வேங்கடசாமி நாட்டாரும், அவருக்கு ஆதரவாக இலங்கை ஆ. ஆறுமுகம் பிள்ளை அவர்களும், தமது கட்டுரைகளை செந்தமிழ்ச் செல்வியில் வெளியிட்டனர். சுவாமிநாத தேசிகர், சிவஞான முனிவர் மற்றும் சபாபதி நாவலர் ஆகியோரின் விவாதங்களை முதன்மைப்படுத்தியும் நாட்டார் கருத்துக்களுக்கு மறுப்பாகவும் திருநெல்வேலி வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளை என்பவரும் அவருக்கு ஆதரவாக பா. கண்ணப்ப முதலியாரும் சா. பெரியசாமிப்பிள்ளையும் கட்டுரைகளை வெளியிட்டு வந்தனர்.

சி. வை. தாமோதரம் பிள்ளை இலக்கண விளக்கப் பதிப்புரையில் 'நூற்கு உரையும் பாயிரமும் அணியியலிற் சொல்லணிச் சூத்திரங்களும் வைத்தியநாத தேசிகருடைய புதல்வர் ஐவருள் மூத்தவராகிய சதாசிவ தேசிகரால் இயற்றப்பட்டன எனக்கூறுவாருமுளர்" (தாமோதரம் ப. 93) என்ற செய்தியுடன் 'பாட்டியல் செய்தார் தியாகராச தேசிகர் என்பது நூற்பாயிரம் புனைந்தருளிய சதாசிவ தேசிகர் குமாரர் தியாகராச தேசிகர் எழுதிய பதிகச் செய்யுளான் அறிக" (தாமோதரம் ப. 94) என்று இலக்கண விளக்க நூலாசிரியர், உரையாசிரியரும், பதிகாசிரியரும் வேறுவேறானவர்கள் என்றும் இலக்கண விளக்க நூலாசிரியரே உரை செய்யவில்லை என்றும், சி. வை. தாமோதரம் பிள்ளை முன்மொழிந்ததையே, ந. மு. வேங்கடசாமி நாட்டரும் 'இலக்கண விளக்க உரையாளர் யார்?" என்ற கட்டுரையின் மூலம் வழிமொழிகிறார்.

அதாவது இலக்கண விளக்க நூலார் வேறு, அதன் உரையாளர் வேறு, என்று அகப்புறச் சான்றுகளால் இலக்கணக்கொத்தின் பாயிரச் செய்தியினையும்

சூறாவளியையும் மறுத்து செந்தமிழ்ச் செல்வியில் முதல் கட்டுரையை எழுதி விவாதத்தைத் தொடங்கி வைக்கிறார்.

நாட்டாரை மறுத்து வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளை செந்தமிழ்ச்செல்வி - இரண்டாம் சிலம்பின் 5, 6-ஆம் பரல்களில் இலக்கண விளக்க உரையாளரும் நூலாசிரியரும் ஒருவரே எனப் பல்வேறு சான்றுகளைத் தந்தும், தாமே நேரில் பார்த்ததாகவும் கூறும் சுவாமிநாத தேசிகரின் கூற்று பிழையா, அல்லது இவ்வுண்மையைக் கூட அறியாமலா முனிவர் சூறாவளியை இயற்றினார்? என்றும் 'இது அறிவுடையோருக்கு அழகன்று" என தன் வாதத்தினை முன்னிறுத்தி இராமலிங்கம் பிள்ளை கட்டுரையை வெளியிடுகிறார்.

இம்மறுப்பினை மறுத்தும், தம் கொள்கையினை நிறுவியும் ந. மு. வேங்கடசாமி நாட்டார் மீண்டும் எழுதியிருந்த கட்டுரை செந்தமிழ்ச்செல்வி இரண்டாம் சிலம்பின் ஏழாம் பரலில் வெளிவந்திருந்தது. இக்கட்டுரையின் தலைப்பு 'இலக்கண விளக்க உரையாளர்" என்பதாகும். இந்தக் கட்டுரையில் வைத்தியநாத தேசிகரை கல்வியறிவு சிறிதுமில்லாதவர் என்று வேங்கடசாமி நாட்டார் இழிவுபடுத்தி எழுதுகிறார்.

ந. மு. வேங்கடசாமி நாட்டார்க்கும் வி. சிதம்பர ராமலிங்க பிள்ளைக்கும் இடையே நடந்த எழுத்துப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டி 'இலக்கண விளக்கம் உரைச்சமாதானம்' என்னும் ஒரு பெரிய கட்டுரையை இலங்கை ஆ. ஆறுமுகம் பிள்ளை, செந்தமிழ்ச்செல்வி இரண்டாம் சிலம்பின் எட்டாம் பரலில் எழுதுகிறார். இதில் பெரும் பகுதி நாட்டாரை ஆதரித்தெழுந்த கட்டுரையாக அமைகிறது.

இதைக் கண்ட வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை 'இலக்கண விளக்க உரை' என்ற தலைப்பில் தம் கருத்தை வலியுறுத்தி மீண்டும் ஒரு கட்டுரையை எழுதுகிறார். இது செந்தமிழ்ச் செல்வி இரண்டாம் சிலம்பின் ஒன்பதாம் பரலில் வெளி வந்தது. இவ்விதழிலேயே இனி, தாம் மறுப்பெழுதப் போவதில்லை என்று ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் 'ஓர் அறிவிப்பு' என்னும் தலைப்பின் கீழ் அறிவித்திருந்தார்கள். அதில் 'தான் இனி மறுப்பு எழுதப் போவதில்லை என்றும்,

என் கொள்கையினை யாவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கவில்லை என்றும், ஆராய்ச்சி செய்து கொள்பவர் கொள்க. தள்ளுவார் தள்ளுக. நான் இது குறித்து எதுவும் எழுதப் போவதில்லை (ந. மு. வேங்கடசாமி நாட்டார், ஓர் அறிவிப்பு, செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு–2, பரல்–9, பக். 395–396) என்று குறிப்பிடுகின்றார்.

இந்த மூன்று நபர்களுக்கிடையே நடந்த வாத விவாதங்களையும், மறுப்புகளையும் கண்ட பா. கண்ணப்ப முதலியார் ‘இலக்கண விளக்க உரை வரலாற்று மயக்க மறுப்பு’ என்னும் தலைப்பில் விரிவானதோர் கட்டுரையை எழுதுகிறார். நல்ல நடையில், தூய தமிழிலான சிறந்த கட்டுரையாகும். இக்கட்டுரை ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் கருத்தை ஏற்கவில்லை. இக்கட்டுரை செந்தமிழ்ச்செல்வி – இரண்டாம் சிலம்பின் பதினொன்றாவது பரலில் வெளிவந்தது. இவ்விதழிலேயே ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், இனித்தாம் மறுப்பெழுதப் போவதில்லை என்ற முந்தைய நிலையினின்றும் மாறி மறுப்பெழுதி உள்ளார். இதில் பா. கண்ணப்ப முதலியாரை மறுத்துள்ளார். இக்கட்டுரையின் தலைப்பு ‘மயக்க மறுப்பின் மேற்குறிப்பு’ என்பதாகும்.

ந. மு. வேங்கடசாமி நாட்டார், வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை, இலங்கை ஆ. ஆறுமுகப்பிள்ளை, பா. கண்ணப்ப முதலியார் என்னும் நால்வரே இதுவரையும் எழுத்துப் போரில் ஈடுபட்டிருந்தனர். இப்பொழுது ஐந்தாவதாகத் வி. பெரியசாமிப்பிள்ளை என்பவரும் நுழைகிறார். இவர் ‘இலக்கண விளக்க உரைச் சமாதான போலித்தோற்றம்’ என்ற தலைப்பில் இலங்கை ஆ. ஆறுமுகம் பிள்ளை, ந. மு. வேங்கடசாமி நாட்டார் மறுக்கிறார். இக்கட்டுரை செந்தமிழ்ச்செல்வி இரண்டாம் சிலம்பின் பன்னிரெண்டாம் பரலில் வெளிவந்தது.

இவ்வாறு தொடர்ச்சியாக ந. மு. வேங்கடசாமி நாட்டாரும் அவர் சார்பாளரும் X வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளையும் அவர் சார்பாளர்களும் என பல கண்டனங்களைத் தாங்கி செந்தமிழ்ச் செல்வியில் ஓராண்டிற்குள் பல கட்டுரைகள் வெளிவருகின்றன. அக்கண்டனங்கள் யாவுமே தத்தமது கொள்கையை நிலைநாட்ட பல்வேறு சான்றுகளை ஆதாரமாகக்காட்டினாலும் அவை தனிமனிதரை உயர்த்திப்

பிடித்தும் பிறரை வசைபாடியுமே வெளிவருவதால் இம்மறுப்புகளை நிறுத்தும் பொருட்டு செந்தமிழ்ச் செல்வியின் ஆசிரியர் வ. சுப்பையா பிள்ளை 1925 ஜனவரி (சிலம்பு- 2, பரல்-12) இதழில் ஓர் அறிவிப்பை வெளியிடுகிறார்.

“நமது செல்வி பல்வகைப் பொருட்கும் இடமமைக்க வேண்டியிருப்பதாலும், இலக்கண விளக்க நூலுரையாசிரியரைப் பற்றிய ஆராச்சிப் பொருள் பல இதுவரை வெளிவந்திருக்கின்றமையாலும் இது குறித்த மறுப்புகள் இனிசெவ்வியில் வெளியிடக் கூடாமையினை அன்பர்களுக்குத் தெரிவிக்கிறோம். (வ. சுப்பையா பிள்ளை, இலக்கண விளக்க நூலுரையாசிரியர், செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு-2, பரல்-12, ப. 546)

இவ்வறிவிப்பின் மூலம் ஒரு வழியாக இலக்கண விளக்கம் X சூறாவளி குறித்த கண்டனங்கள் நிற்கின்றன. இவையாவற்றிற்கும் முன்னரே செந்தமிழ் இதழில் இலக்கண விளக்கம் குறித்து ஒரு கட்டுரை மட்டும் வெளிவந்தது. செந்தமிழ் 1911-1912 (தொகுதி-10, பகுதி-7) இல் ‘இலக்கண விளக்கமங்கல வாழ்த்து’ என்ற தலைப்பில் ச. பூபாலப்பிள்ளை என்பவர் சிவஞான முனிவரையும், சபாபதி நாவலரையும் மறுத்து கட்டுரை ஒன்றை வெளியிடுகிறார். அதில் சிவஞான முனிவரை ‘கல்விச் செருக்குடையவர்’ என்றும் இவர் இலக்கண விளக்க மங்கல வாழ்த்தை, அமங்கல வாழ்த்து என்று கூறியதை மறுத்து எழுதியுள்ளார். மேலும் இது தொடர்பான செய்திகள் ஏதும் செந்தமிழில் வெளிவரவில்லை.

இலக்கண விளக்க உரையாளர் யார் என்று மறுத்தும், விவாதித்தும் வந்த இந்த இரு பிரிவினர்கள் முன் வைக்கும் கருத்து, தொகுத்து கீழே தரப்படுகின்றது.

**நூலாசிரியர் செய்ததே உரை**

நூலாசிரியர் வைத்தியநாத தேசிகரே உரை இயற்றினார் என்னும் கூற்றுக்குக் கீழ்க்கண்ட சான்றுகளை அடிப்படையாகக் கொள்வார்கள்.

இலக்கண விளக்கத்திற்கு நூலாசிரியராகிய வைத்தியநாத தேசிகரின் மகனார் சதாசிவ நாவலர் இயற்றிய பாயிரத்தின்கண்,

‘இலக்கண விளக்கம் என்று ஒரு பெயர் நிறீஇப்

புலப்படுத்து இயல்உறப் பொருள் விரித்து உரைத்தனன்' (இல. வி. சிறப்புப்பாயிரம்)

என்று கூறப்பட்டிருக்கிறது.

இலக்கண விளக்கப் பாட்டியலுக்கு நூலாசிரியரின் பெயரன் வைத்தியநாத தேசிகர் இயற்றிய பதிகத்தின் கண்,

'ஐந்தியலுந்தம் புந்தியின் வேறு கொண்டு
உரைத்த புலவர் வரைத்த வுரையான்
முதலு முடிவுஞ் சிதர்தரப் பலவாய்க்
கிடந்த வியலைத் தொடர்ந்தொரு வழிப்பட
ஈட்டலா னிலக்கண விளக்க மென்ன
நாட்டினன் வைத்தியநாத தேசிகன்' (இல. வி. பாட்டியல்பதிகம்)

என்று இடம் பெற்றிருக்கிறது.

இலக்கணக் கொத்து நூற்பாயிரத்தின் கண், அதனாசிரியர் சுவாமிநாத தேசிகர்,

'திருவாரூரில் திருக்கூட்டத்தில்
தமிழ்க்கிலக் காகிய வயித்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்து உரை எழுதினன்.

(சுவாமிநாத தேகிர், இலக்கணக் கொத்து, நூ. 7)

என்று கூறியிருத்தல், இலக்கண விளக்கத்திற்கு மறுப்பாக 'இலக்கண விளக்கச் சூறாவளி' என்னும் மறுப்பு நூல் செய்த மாதவச் சிவஞான யோகிகள் நூலாசிரியரையும் உரையாசிரியரையும் ஒருவராகக் கொண்டு மறுப்பு எழுதியமை. பதிப்பு வேந்தர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் தமது பதிப்புரையில், 'இலக்கண விளக்கம் மூலமும் உரையுமாகவே ஆசிரியரால் இயற்றப்பட்டதென்று கொள்வதே தகுதி' என்று குறித்தமையே வைத்துக்கொண்டு இவர்கள் நூலாசிரியரும் உரையாசிரியரும் ஒருவர் என்று கூறுகின்றனர்.

**உரை நூலாசிரியரால் செய்யப்பட்டதன்று**

உரை, நூலாசிரியரால் செய்யப்பட்டதன்று என்னும் கொள்கையுடையோர் மேலே கூறிய சான்றுகள் அனைத்தையும் மறுக்கின்றனர். மாதவ சிவஞான யோகிகளும், பதிப்பு வேந்தர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களும் முதல் மூன்று சான்றுகளின் அடிப்படையிலேயே நூலாசிரியரையும் உரையாசிரியரையும் ஒருவராகக் கொண்டிருப்பர் என்பதால், அம்மூன்று சான்றுகளை மறுத்தலே அவர்களையும் மறுத்தலாக அமையும் என்பது இக்கொள்கையுடையார் கருத்தாகும்.

‘பொருள் விரைத்துரைத்தனன்” என்றும், ‘வரைத்த உரை” என்றும், ‘வகுத்த உரை எழுதினன்’ என்றும் இலக்கண விளக்கம், இலக்கண விளக்கப் பாட்டியல், இலக்கணக் கொத்து ஆகியவற்றின் பாயிரங்களுள் கூறப்பட்டிருப்பதற்கு, ‘வைத்தியநாத தேசிகர் தமது நூலை மாணவர்களுக்கு பொருள் விரித்து அறிவுறுத்தினர் என்று துணையே பொருள் கொள்ள வேண்டும்’ என்பார்கள் இவர்கள்.

இவ்வாறு பிறர்கொள்கை மறுத்தவர்கள், தம் கொள்கைக்குச் சான்றாகக் காட்டும் கருத்துகள் வருமாறு:

‘நூலாசிரியரே உரையாசிரியரும் என்றால், தம்மை உரையின்கண் படர்க்கையில் சுட்டிச் சென்றிருக்க மாட்டார்’ என்பார்கள் இவர்கள்.

‘எழுத்திலக்கணம் உணர்த்துகின்றார்’ (இல. வி. எழு. நூ. 1 உரை)

‘ஆகுபெயரான் எழுத்திலக்கணத்தை எழுத்தென்றுங் கூறினார். (இ. வி. எழு. நூ. 2 உரை)

‘இந்நயம் பற்றி இவர் இலக்கணம் கூறாமையின்’ (இ. வி. எழு. நூ. 2 உரை)

‘சார்பின் பாலவென்றார் இந்நூலுடையார் என்றுணர்க’ (இ. வி. எழு. நூ. 5 உரை)

‘அல்வழி வேற்றுமை என்றார்’ (இ. வி. உயி. பு. நூ. 2 உரை)

‘நிறுத்த முறையானே எழுத்துணர்த்திச் சொல் உணர்த்துகின்றார் ஆதலின்’ (இ. வி. பெய. நூ. 1 உரை)

‘பொருளிலக்கணம் உணர்த்துகின்றார்’ (இ. வி. அகத். நூ. 1 உரை)

என்றும், பிறவானும் நூலாசிரியரை உரை படர்க்கையில் சுட்டியிருத்தலால் நூலாசிரியரும் உரையாசிரியரும் ஒருவரல்லர் என்பது இவர்கள் கருத்து

பிரயோக விவேகமுடையாரும், இலக்கணக் கொத்துடையாரும்,

'இவ்வாறு கவிதோறும் உரைக்கு முன்னாகப்பின்னாக உரைச் சூத்திரமும் செய்தோம். (சுப்பரமணிய தீட்ஷிதர், பிரயோக விவேகம், காரகபடலம், நூ. 2-இன் உரை)

'தொல்காப்பியம் ஐந்தனையும் உணர்த்தலிற் கடலென்றாம். (சுவாமிநாத தேசிகர், இலக்கணக் கொத்து, பாயிரவியல், நூ. 6-இன் உரை)

என்று உரையும் நூலும் செய்தோர் தாமே என்பது தோற்றத் தன்மையிற் கூறிச் சென்றதனைக் காட்டுவார்கள் இவர்கள்.

'புள்ளியில்லா எல்லா மெய்யும்' (இ. வி. எழு. 18) என்னம் எழுத்தியல் நூற்பாவுரையில்,

'உயிரும் மெய்யும் கூடுகின்ற கூட்டத்தினை எல்லா மெய்யுமென மெய்மேல் வைத்துக் கூறியது அது முன்னர்க் கூறப்படுதல் நோக்கிப் போலும். (தி. வே. கோபாலையர் (ப. ஆ) இலக்கண விளக்கம், எழுத்ததிகாரம், ப. 151) என்று கூறப்பட்டுள்ளது. நூலாசிரியரே உரையாசிரியராகினால், நூற்கருத்தில் இவ்வாறு ஐயம்தோன்ற உரையை அமைக்கமாட்டார் என்பது இவர்கள் கருத்தாக உள்ளது.

**சமாதானம் கூறுவோர்**

இரு சாராரின் கருத்தையும் இணைத்துப் புதுக்கருத்தொன்று கூறுவாரும் இருக்கின்றனர். வைத்தியநாத தேசிகர் தாம் இயற்றிய நூலைத் தம்மிடம் படிக்கும் மாணவர்களுக்குப் பொருள் விரித்து உரைத்திருக்கலாம் என்றும், அதனை நேரில் கண்ட சுவாமிநாத தேசிகர் தமது இலக்கணக் கொத்தில் 'இலக்கண விளக்கத்திற்கு வைத்தியநாத தேசிகர் உரையெழுதினார்' என்று குறித்திருக்கலாம் என்றும் கருதுவர் இச்சமாதானவாதிகள். இவ்வாறு தம் மாணவர்களுக்கு வைத்தியநாதன தேசிகர் விரித்துக் கூறிய உரையைச் சதாசிவ நாவலர் எழுதி வெளிப்படுத்தியிருக்கலாம் என்றும் இவர்கள் கருதுவர். இவ்வாறு கருதுவதால்

சிக்கல் தீரும். மேலும் இவை யாவும் தேவையற்ற மறுப்புகள் ஆகும். புலவர்கள் தங்களது புலமையின் செருக்கை காட்டுவதாக இம்மறுப்புரைகள் அமைந்துள்ளன.

எனினும் இலக்கண விளக்க உரை மிகவும் சிறந்தது என்பதில் ஐயமில்லை கருத்துரைத்துப் பொழிப்புத் திரட்டி விளங்க கூறுவதாக உரை அமைந்துள்ளது. இலக்கண மேற்கோள்களும், இலக்கிய எடுத்துக்காட்டுகளும் உரையை வளப்படுத்தி, நூலைப் புரிந்து கொள்ளத் துணை நிற்கின்றன.

**முடிவுரை**

இலக்கண விளக்க உரையாளர் யார் என்ற மறுப்புகளை ஒட்டுமொத்தமாக தொகுத்துப் பார்த்தால் இது தேவையற்ற மறுப்பாக இருக்கின்றது. இலக்கண விளக்க உரை நூலாசிரியர் இயற்றினாரா அல்லது அவரது மகனார் இயற்றினாரா என்ற நிலையை விடுத்து, நூலில் பல்வேறு செய்திகள் கூறப்படுகின்றன. அதை விவாதிக்காமல் நூல் யார் எழுதியது, நூலாசிரியர் யார் என்று விவாதிப்பது வீண் செயல் ஆகும். அதுபோல் இது தேவையற்ற மறுப்புகளாக அமைகின்றன. மேலும் ஒரு தனிமனிதரைப் புண்படுத்தும் வகையில் மறுப்புகள் அமைந்துள்ளன. இந்த மறுப்புகள் யாவும் புலவர்களின் புலமை செருக்கை காட்டுவதாகவே இருக்கின்றன.

**துணைநூற்பட்டியல்**

1. கோபாலையர் தி.வை. (ப.ஆ) இலக்கண விளக்கம் -எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், சரஸ்வதிமகால் நூல் நிலையம், தஞ்சாவூர்-1971
2. கோபாலையர் தி.வை. (ப.ஆ) இலக்கணக் கொத்து மூலமும்,உரையும், தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு, தஞ்சாவூர்-1990
3. கோபாலையர் தி.வை. (ப.ஆ) பிரயோகவிவேகம், மூலமும், உரையும், தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு, தஞ்சாவூர். 1973
4. செந்தமிழ்ச்செல்வி 1924ம் ஆண்டு மார்ச்சு (சிலம்பு - 2, பரல் – 3) இதழ் தொடங்கி 1925 ஜனவரி (சிலம்ப-2, பரல்-12) வரை.